(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு approach road தான் போடவேண்டும். இந்த சாலை அமைக்கப்படவில்லை என்றால் கோபால்சாமி சமுத்திரத்திலிருந்து சித்தமல்லி, கருங்காடு பகுதி மக்கள் அங்கே போவதற்கு வாய்ப்பு இல்லை. 4, 5 கிலோ மீட்டர் சுற்றித்தான் வரவேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இதை கருத்தில் கொண்டாவது இனி மேலாவது அந்தப் பாதையை அமைப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேரன்மாதேவித் தொகுதியின் மேல் நம்முடைய மாண்புமிகு திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு நிறைய ஆர்வம் இருக்கிறது என்று எனக்குத் தெரியும். இந்த அப்ரோச் ரோடு அமைக்க ஏறத்தாழ 10 ஏக்கர் நஞ்சை நிலத்தைக் கையகப்படுத்த வேண்டியிருக்கிறது என்று எனக்கு கணக்கு சொல்லியிருக்கிறார்கள். 15 லட்ச ரூபாய் இதற்குச் செலவாகும் என்றும் கணக்குச் சொல்லியிருக்கிறார்கள். எனவே இந்த நிதி நிலையின் காரணமாகத்தான் இப்போது முடியாது என்று நான் சொல்லியிருக்கிறேன். எதிர்காலத்தில் நிதி நிலைமைக்கு ஏற்ப அது பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: போக்குவரத்துத் துறை மானியம் வாங்குவதற்கு முன்பு இதை வழங்கிவிடுங்கள்.

தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் சிலை.

171—(*வினா எண். 49) திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை பெரிய கோவிலில் ராஜ ராஜ சோழன் சிலை அமைப்பதற்கு மைய அரசிடமிருந்து அனுமதி வந்துள்ளதா?

(ஆ) புதிய சிலை எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்ற பிறகு இதுபற்றி முடிவு எடுக்கப்படும்.

திரு ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இராசராசனின் சிலை அமைப்பதற்கு மத்திய அரசிடமிருந்து அனுமதி வந்து விட்டதாக சொல்லப்பட்டுகிறதே, அது புதிய சிலையாக வைக்கப்படுமா, எப்போது வைக்கப்படும் என்பதை மீண்டும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசிடமிருந்து இன்னும் அனுமதி வரவில்லை. அனுமதி வந்தவுடன் சிலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய கோவிலைச் சுற்றி, அதன் வளாகத்தில் நிறைய கடைகள் சாதாரணமாக இருக்கின்றன. ஆனால் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கே வருவதால் புதிதாக அங்கே கடைகள் கட்டுவதற்கு அரசிடம் ஏதேனும் உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் பற்றி தனியாக கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் திருவரங்கத்தில் திறப்புவிழா நடந்த கோபுரம் இந்தியாவிலேயே உயரமானது என்று கூறுகிறார்கள். விரைவில் உலகப் புகழ் பெறப் போகும் இந்த கோபுரத்தை எழுப்புவதற்கு மிகவும் துணை நின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு திருவரங்கத்தில் சிலை எழுப்புவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய திருவுருவப்படம் அலுவலங்களில் எங்கும் இருக்கக்கூடாது என்று ஒரு ஆணையை இட்டு இருக்கிறார்கள். அவர் விருப்பப்பட்டால் எங்கும் சிலைகள் இருக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சிலையை கோவில் வளாகத்திற்கு உள்ளே வைப்பதற்கு இன்னும் அனுமதி வரவில்லை என்று சொன்னார்கள். இப்போது இருக்கின்ற இடத்திலாவது அந்த மன்னனுடைய புகழ் எழுதப்பட்டு இருக்கிறதா என்றால் இல்லை. அவர் மைசூரை வென்று உளம்பாடி, தணிகைபாடி என்ற இடங்களை ஆக்கிரமித்தார்; சேர நாட்டை வென்று காந்தலூர், விழுமம் என்ற இடங்களை கைப்பற்றினார்; பாண்டிய நாட்டை இரண்டு முறை வென்றார்; மேலை சாளுக்கியனை போட்டியில் தோற்கடித்தார்,

தெலுங்கு சோழ நாட்டை கைப்பற்றினார்; அதோடு இலங்கைக்குச் சென்று அனுராதபுரத்தை அழித்து புலன்அருமை என்று சொல்லுகின்ற இடத்தில் சோழ பிரதிநிதியை தங்க வைத்தார். 196 அடி உயரம் உடைய அந்த பெரிய கோபுரத்தையும், நிழலே கீழே விழாத கோவிலையும் நிர்மாணித்தார்; நர்மதை கரையிலிருந்தே கல் எடுத்து வந்து லிங்கத்தையும், நந்தியையும் ஏற்பாடு செய்தார்; .. .. ..

Mr. SPEAKER: Are you taking history class?

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, இந்தச் சிலை வைப்பதே பழம் பெருமையை நிலைநாட்டத்தான். அதை ஒரு மூலையில் போட்டுவிட்டு, அதனுடைய மூலத்தை சொல்லாமல் இருக்கக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அவை எல்லாம் எழுதிவைக்கப்படுமா? அதன்மூலம் நமது பெருமை உலகத்தில் பரவ வழி ஏற்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, ராஜராஜனுடைய புகழைப்பாடும் மெய்க் கீர்த்திகள் எழுதிவைக்கப்படும்.

திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகம்.

172—(*வினா எண் 5654) திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்றும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை அரசு கட்டிடத்திற்கு மாற்ற தற்போது உத்தேசிக்கப்படவில்லை.

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேலாவது மாற்றுகின்ற உத்தேசம் இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, மேற்படி கட்டிடம் கட்டுவதற்கு ரூபாய் 14.40 இலட்சம் தேவைப்படுகிறது. நிதிநிலை சரியானவுடன் அங்கு கட்டிடம் கட்டப்படும்.

செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காட்டில் பறவைகள் சரணாலயம்.

173—(*வினா எண். 9105) திரு. கே. பி. கே. சேகர்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் பழவேற்காடு ஏரியில் பறவைகள் சரணாலயம் அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா?